1972 மார்ச் 30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த தும்பல் காட்டுப் பள்ளம் ஏரி விஷயமாக வருவாய் வாரியம் சேலம் மாவட்ட ஆட்சியாளர் எடுத்துக்கூறிய கருத்துக்களின்படி குறைந்தளவு வனநில ஆர்ஜிதம் உள்ள வகையில் இத்திட்டத்தை மறு பரிசீலனை செய்யுமாறு தலைமைப் பொறியாளரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்தத் திட்டம் சேலம், தருமபுரி வட்டம் கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

சிமிட்டிச் சாலைகள்

* 805 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சிமிட்டிச் சாலைகள் அமைப்பது நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

மதுரை மாவட்டத்திலுள்ள அணைக்கட்டுகள்

* 806 வினு—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

மதுரை மாவட்டத்தில் உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவையாக அரசு அங்கீகரித்துள்ள அணைக்கட்டுகள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

மதுரை மாவட்டத்தில், வைகை நதி அணைக்கட்டும், மஞ்சளாறு அணைக்கட்டும், உல்லாசப் பயணிகள் காண்பதற்குரியவை. இப்பொருள் பற்றி அரசு எதும் அங்கீகாரம் அளிக்கவில்லை.

வேதாரண்யத்திலுள்ள நினைவுச் சின்னத்துக்குச் செல்ல சாலைகள்

* 807 வினு—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம் நடந்த இடத்திலுள்ள நினைவுச் சின்னத்தை மக்கள் சென்று காண சாலைகள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Storm at Rameswaram.

*808 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whether a storm hit Rameswaram on 20—7—1971 ; and

(*b*) if so, the details of damage and dislocation caused ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : 20—7—71-ஆக இல்லாமல் இருக்கலாம். அந்த மாதத்தில் அம்மாதிரி ஒரு புயல் அடித்து சேதங்களெல்லாம் ஏற்பட்டதே. அந்த மாதிரி ஏதாவது புயல் அடித்து சேதங்கள் ஏற்பட்டதா ? 1964-ம் வருஷம் புயல் அடித்து பெரிய சேதம் ஏற்பட்டிருக்கிறதே. அடிக்கடி புயலினால் பாதிக்கப் பட்டு சேதம் ஏற்படுகின்ற ஒரு தீவாக இராமேஸ்வரம் இருப்பதினால் என்ன பாதுகாப்பு நடவடிக்கை அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 20—7—71 புயல் அடித்த தாக பத்திரிகையிலே செய்தி வெளிவந்தது. ஆனால் புயல் அடித்தது என்பது உண்மை அல்ல. பத்திரிகையில் அப்படி ஒரு செய்தி வந்தது என்பது உண்மை. பத்திரிகையில் மட்டும் புயல் அடித்ததே தவிர உண்மையாக புயல் அடிக்கவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : நான் அறிய விரும்புவதெல்லாம் 1964-ம் வருடம் புயல் அடித்தது என்பது உண்மை. அம்மாதிரியாக இந்தத் தீவில் புயலினால் பாதகங்கள் ஏற்பட்டால் அதைத் தடுப் பதற்கு மக்களுக்கு பாதுகாப்பான நடவடிக்கை ஏதாவது அரசு எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, புயல் வருகிறது என்று தெரிந்தால். புயல் சின்னம் என்ற ஒரு கொடியை துறைமுகத்தில் நாட்டுகிறார்கள், உயர்த்துகிறார்கள். அதிலிருந்து புயல் சீக்கிரம் வர முடியும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தண்டோரா போடுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பத்திரிகையில் மாத்திரம் புயல் அடித்தது என்று சொன்னார்கள். தினத்தந்தி பத்திரிகையிலா அல்லது வேறு ஏதாவது பத்திரிகையில் புயல் அடித்ததா ?